சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் இராயபுரம் கிழக்கு மேற்குப் பகுதிகளின் சார்பில் "தமிழ்நாடு தலைகுனியாது என்ற முழக்கப் பொதுக்கூட்டம் இராயபுரம் கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.ஜட்டீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மற்றும் மாநில நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட பகுதி நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், அயப்பாக்கம் டி.என்.எச்.பி. பகுதியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் 642 துணை சுகாதார நிலையங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் திறந்து வைத்து. 100 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தி சீர்வரிசைகள், ஊட்டச்சத்து பெட்டகம் உள்ளிட்டவைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி துரை சந்திரசேகர், ஒன்றிய செயலாளர் துரைவீரமணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் எ.சோமசுந்தரம், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மோகன் காந்தி, மருத்துவர்கள், கிராமப்புற சுகாதார செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் நினைவேந்தல் - படத்திறப்பு!

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பங்கேற்பு!

சென்னை, பிப். 2 கவிஞர் ஈரோடு தமிழன்பன் நினைவேந்தல் நிகழ்ச்சியினைச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழித் துறை வரும் பிப்ரவரி 3ஆம் தேதி மெரினா வளாசப் பவளவிழாக் கலையரங்கில் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியில் திராவிடர் கழகத்தலைவர் கி. வீரமணி அவர்கள் கலந்துகொண்டு கவிஞர் ஈரோடு தமிழன்பனின் உருவப் படத்தினைத் தை



திறந்துவைத்துச் சிறப்புரை ஆற்றவுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் நீதியரசர் அரி. பரந்தாமன் அவர்களும், மூத்த பேராசிரியர் இராம. குருநாதன் அவர்களும், திராவிடர் கழகப் பிரச் சாரச் செயலாளர் வழக் கறிஞர் அ. அருள் மொழி அவர்களும் பங் கேற்று உரை நிகழ்த்து கின்றனர்.

மேலும் தி. வேணு கோபால் அவர்களும் கவி ஞரின் மகன் மருத்துவர் பாப்லோ நெருடா அவர் களும் கலந்துகொண்டு உரை யாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியின் தொடக் கத்தில் கவிதை நினை வேந்தல் நடைபெறவுள் ளது.

இதில் கவிஞர் தி. அமிர் தகணேசன், கவிஞர் கவி முகில், கவிஞர் விழிகள் தி. நடராசன், கவிஞர் தமி ழமுதன் ஆகியோர் பங் கேற்கின்றனர்.

நிகழ்ச்சிக்குச் சென் னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்கள் தலைமை தாங்குகின்றார்.

வரவேற்புரையை முனைவர் வாணி அறிவாளன் அவர்களும் நன்றியுரையை முனைவர் வே. நிர்மலர் செல்வி அவர்களும் ஆற்ற வுள்ளனர்.

களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

ஜாபர்கான்பேட்டையில் - அறிஞர் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

திருவுருவச் சிலைக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, பிப்.2- சைதை மேற்கு பகுதி 139 வது வட்டம் ஜாபர்கான் பேட்டை கெங்கையம்மன் கோயில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு நாளை (3.2.2026 செவ்வாய்க்கிழமை) அன்று காலை 6.30 மணிக்கு தலைமை பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில், பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில், மாவட்ட செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணி யன் பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்து கிறார்.

மேலும் இந் நிகழ்ச்சியில் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணியன், தா.மோகன்குமார், எம்.எஸ்.ஹரிபாபு, டி.என். சிவமணி, த.சம்பத், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஆர். கிருஷ்ணகுமார், நா.மணி கண்டன், ஜி.கே.ராமச்சந்தின், வீ.மதிவாணன், த. மணி, மு.கதிரவன், பொ. பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ. அயாத்பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதிவெங்கடேசன், சுமதி தீனதயாளன், ஜிம். பிரபு, கொடி.பாலா, சைதை எல்.சந்திரன், து.முரளி, சி.டி.காசிநாதன், வி.சபரி, அ.சுப்பிரமணி, இரா.சத்யா, எம்.அருண், ம.திலிப்பன், க.ரஞ்சித் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை தலைமை பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப்.2 குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர்படப்பை ஆ. மனோகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (03.02.2026 செவ்வாய்க்கிழமை), மாலை 4.30 மணியளவில் ஜெ.சி. மகால், கரசங்கால், படப்பையில் நடைபெறுகிறது.

குன்றத்தூர் (தெ) ஒன்றியச் செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன் தலைமை வகிக்கிறார்.

வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதாசுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன், திருமுடிவாக்கம் இ.மணி, ஏ.வந்தேமாதரம், உமாமகேஸ்வரி வந்தேமாதரம், சங்கீதாவேலு, மலர்விழி தமிழ்அமுதன், வி.எஸ். கோதண்டராமன், என்.எஸ். இளங்கோ, ரா.தீபக்ராஜ், க.பா.ஆடலரசு, லோ.சுதாகர், அ.ஜமீர், நா.ஜெகதீசன், ஜெ.கோகுல்நாதன், ஜெ. குணசேகரன், ரேவதி சதீஷ், ரா.பிரதீப், சே.பாலகிருஷ்ணன், மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், ஜி. இருசப்பன், ஏ.இ.பஞ்சாட்சரம், எம்.அசோக்குமார், ப. வேல்முருகன், வ.வீரபாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA2, வாக்குச்சாவடி இமுகவர்கள் BDA, மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்துடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்

1. 11.02.2026 அன்று திருவிடந்தையில் கழகத்தலைவர் பங்கேற்கும் BLA2, BLC, BDA, BYO சந்திப்பு மாபெரும் மண்டல மாநாடு.

2. மார்ச்1 கழகத்தலைவர் பிறந்தநாள் விழா.

3. 2026 சட்டமன்ற தேர்தல் பணி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 347 வது நாள்!

எழும்பூர் வடக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, பிப்.2- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 347 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (01.02.2026), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 99, சண்முகராயன் தெரு, 2) வட்டம்99அ, புல்லா புரம், கீழ்ப்பாக்கம் நெடுஞ்

சாலை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு. மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான் மதி கதிரவன், எல்.சுந்த ர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

மும்பை புறநகர் தி.மு.க. சார்பில்

பேரறிஞர் அண்ணாவின் 57 ஆவது நினைவேந்தல் - பொதுக்கூட்டம்!

அலிஷேக் மீரான் – முன்னணியினர் சிறப்புரை!

மும்பை, பிப்.2- மும்பை புறநகர் மாநில தி.மு.கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 57 ஆவது நினைவேந்தல் கூட்டம் வருகின்ற நாளை (03-02-2026 செவ்வாய்க்கிழமை) மாலை சரியாக 6:00 மணியளவில் பாண்டுப் பிரைட் மேனிலைப் பள்ளியில் நடைபெற உள்ளது.

மும்பை புறநகர் மாநில திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்புக் குழு உறுப்பினர் முனைவர் வதிலை பிரதாபன் துவக்க உரையாற்று கிறார்.

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிஷேக் மீரான்,, மும்பை திராவிடர் கழகத்தலைவர் பெ.கணேசன் மற்றும் இந்தியப் பேனா நண்பர் பேரவைத் தலைவர் மா.கருண் ஆகியோர் நினைவேந்தல் சிறப்புரையாற்றுகிறார்கள்..

நிகழ்வினை திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி அமைப்பாளர் ந. வசந்தகுமார் தொகுத்து வழங்குகிறார்.

பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், அ. இளங்கோ, வே.சதானந்தன், எஸ்.பி குமரேசன், வீரை சோ. பாபு, சா.சி.தாசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ. ரவிச்சந்திரன் ஆகியோர் நினைவேந்தலுரை ஆற்றுகிறார்கள்.

அனைத்துக் கிளைக்கழக நிர்வாகிகளும் இயக்க உணர்வாளர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு பேரறிஞருக்குப் புகழஞ்சலி செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

விஜயா தாயன்பன் தலைமையில்

சென்னை மண்டல மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

சென்னை மண்டலக் குழுத் தலைவர் குமரி விஜயகுமார் அறிக்கை!

சென்னை, பிப். 2 - சென்னை மண்டல மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (2-ஆம் தேதி - திங்கட்கிழமை) பிற்பகல் 3 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

தேர்தல் பணி குறித்து ஆலோசிப்பதற்காக நடைபெறும் இக்கூட்டத்திற்கு மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் தலைமை தாங்குகிறார்.

மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப. ராணி,

மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. திருவள்ளூர் மாவட்ட பொறுப்பாளர் சேலம் சுஜாதா (பிரச்சார குழு செயலாளர்)

பிரச்சார குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன்,

மாநில சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஷ் மற்றும்

சென்னை, காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளர் Dr. யாழினி PM வாசுகி ரமணன், மகளிர் அணி ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட சென்னை வடக்கு, கிழக்கு, வடகிழக்கு, மேற்கு, தென் மேற்கு, தெற்கு, திரு வள்ளூர் கிழக்கு மற்றும் மத்திய மாவட்டம், காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் மற்றும் சமூக வலைதள பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கூட்ட ஏற்பாடு: மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், சென்னை மண்டல குழு தலைவர்

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 11 வது மண்டலம், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கல்விக் குழு உறுப்பினருமான ரமணி மாதவன் தலைமையில் 11 வது மண்டலக் குழுத் தலைவரும், மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளருமான நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் ஆலப்பாக்கம் தந்தை பெரியார் விளையாட்டுத் திடலை ரூபாய் 1.85 கோடி மதிப்பில் மேம்பாடு செய்திட மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், எம்.ஜி.ஆர். பல்கலைக் கழக ஆட்சி மன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் 147 வது வட்டக் கழக செயலாளர் மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன், மாவட்டப் பிரதிநிதிகள் க.பிருந்தாவனன், ஜி.குப்புசாமி, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஒன்றியச் செயலாளர், மூவரசம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர்

ஜி.கே.ரவி [எ] விவேகானந்தன் மாமனார் எம்.பச்சைபிள்ளை மறைவு!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் – கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை,பிப்.2 புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர், மூவரசம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ஜி.கே.ரவி [எ] விவேகானந்தன் மாமனாரும் முன்னாள் மூவரசம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வி.விஜயா தந்தையுமான எம். பச்சைபிள்ளை நேற்று

(1.2.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு மறைவு எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்து அவரது இல்லமான எண் : 1/158, பஜனை கோவில் தெரு, மூவரசம்பட்டு, சென்னை-91 என்ற முகவரில் வைக்கப்பட்டிருக்கும் அன்னாரின் உடலுக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன், மூவரசம்பட்டு ஊராட்சி கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (02.02.2026 திங்கட்கிழமை) மாலை 3.00 மணிக்கு மேல் மூவரசம்பட்டு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதி, 74 வது வட்டம், குளக்கரை சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வேப்பிலைகாரி அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தின் குடமுழுக்கு விழாவை சிறப்பிக்கும் விதமாக ஆலய பக்தகோடிகள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் பி.உதயசங்கர் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. இவ்விழாவில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.